**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**ஆசிரியர் பட்டயப் பயிற்சி**

# தாள் –2 அடிப்படைத் தமிழ் இலக்கணம்

**முதல் பருவம்**

| |
|---|
| **நேரடி எழுத்துத் தேர்வு WRITTEN EXAMINATION)** |

**ஜனவரி–பிப்ரவரி – 2024**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3 இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்)**

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பழங்கால எழுத்துகளின் ஆராய்ச்சியை எவ்வாறு அழைப்பர்?
2. ஐகாரக் குறுக்கத்தின் மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.
3. ஒலிகளை உருவாக்கும் இயங்கு உறுப்புகள் எவை?
4. ஆறாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபுகளை எழுதுக.
5. "கூடி மகிழ்ந்தனர்" – எவ்வகை தொடர்?
6. தனிவினை எடுத்துக்காட்டுத் தருக.
7. அரசனுடைய புகழ், கொடை, வலிமை, வீரம் முதலிய பண்புகளைப் புகழ்ந்து பாடும் திணை எது?
8. இரு பெயரொட்டுப் பண்புத்தொகைக்கு எடுத்துக்காட்டு தருக.
9. யாப்பு உறுப்புகளை எழுதுக.
10. தமிழில் பேச்சு வழக்கில் உள்ள மரபுத் தொடர்கள் இரண்டினைக் கூறுக.
11. கருத்துவகை வாக்கியம் எத்தனை வகைப்படும்?
12. சிங்கத்தின் இளமைப் பெயரைக் கூறுக.



13. முதன்முதலில் வலைப்பூ சேவையை வழங்கிய நிறுவனம் எது?

14. சூடாமணி நிகண்டை இயற்றியவர் யார்?
15. தமிழ்க் கலைக் களஞ்சியத்தை வெளியிட்ட நிறுவனம் எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. எழுத்தொலிகள் பிறப்பதற்குக் காரணமான பேச்சுறுப்புகளைப் பற்றிக் கூறுக.
2. பகாப்பதம் என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறி எடுத்துக்காட்டு தருக.
3. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக.
4. உயர்வு நவிற்சி அணி என்றால் என்ன? சான்று தருக.
5. ஐந்து திணைகளையும், அதன் உரிப்பொருளையும் கூறுக.
6. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தைக் கூறுக.
7. விலங்குகள் மற்றும் பறவைகளின் இளமைப்பெயர்களைக் குறிக்கும் மரபுச்சொற்களைக் கூறுக.
8. தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு மின்னூலகம் எவ்வாறு பங்களிக்கிறது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. மொழி முதல், இடை மற்றும் இறுதி எழுத்துகள் பற்றி விரிவாக விளக்குக.

(அல்லது)

வேற்றுமை உருபு என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

2. தமிழில் வழங்கும் சொல்வகைகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

மொழியை கையாளுவதில் சொல் நிலையில் ஏற்படும் இடர்ப்பாடுகள் பற்றி விரிவாக விளக்குக.

3. வல்லினம் மிகும் இடம், மிகா இடம் குறித்து விரிவாக விளக்குக.

(அல்லது)

மாணவர்களின் திறன்களை வெளிக்கொணருவதில் கருத்தரங்கள் மற்றும் பயிலரங்கள் எவ்வாறு துணைபுரிகின்றன? விளக்குக.